# பம்மல் நகராட்சி

## கூட்ட நடவடிக்கைகளின் எடுகுறிப்பு

2018 ஆண்டு ஏப்ரல் 6ம் நாள் வெள்ளிக் கிழமை மாலை 3.00 மணிக்கு, பம்மல் நகராட்சியின் மன்றக் கூட்டம் நகராட்சி தனி அலுவலர் மற்றும் ஆணையர் திருமதி. இரா. சந்திரா M.Com., MCA., MBA., அவர்கள் தலைமையில் மன்றக்கூடத்தில் நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைளின் எடுகுறிப்பு.

**பொருள் எண். 1**

மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தனது ந.க.எண். 17697/2002/என்2 நாள். 05.04.2018 நாளிட்ட கடிதத்தின் வாயிலாக காஞ்சிபுரம் மாவட்டம், பல்லாவரம் வட்டம், பம்மல் கிராமம் புல எண். 85/1ல் 15.73.5 எக்டர் பரப்பளவுள்ள மூங்கில் ஏரி நிலத்தினை தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு நில உரிமை மாற்றம் செய்ய கூடுதல் செயலர், நில நிர்வாக ஆணையர் அவர்களின் 07.06.2016 கடிதத்திற்கு இனங்க நகராட்சியின் தடையின்மை கோரப்பட்டுள்ளது. தமிழ்நாடு குடிசை பகுதி மாற்று வாரியம் தனது கடித ந.க.எண். இ8/142/2018 16.02.2018 நாளிட்ட கடிதத்தின் மூலம் பம்மல் நகராட்சி எல்லைக்குட்படட பம்மல் கிராமம் புல எண். 85/1ல் மூங்கில் ஏரி திட்ட பகுதி குடிசைப்பகுதிவாழ் மக்களின் முன்னேற்றத்திற்காக “உள்ளது உள்ளபடி’’ முறையில் 793 பணியாளர்களுக்கு கணக்கெடுப்பு செய்து அதில் 321 பயனாளிகளின் முன்வைப்பு தொகை தவணைகளாக செலுத்தி வருவதாகவும், 472 பயனாளிகள் முன்வைப்பு தொகை மட்டும் செலுத்தியுள்ளனர் என்றும் தெரிவித்துள்ளனர். மேற்படி இடத்தினை தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு நில உரிமை மாற்றம் செய்ய தீர்மானம் வேண்டி வரப்பெற்றுள்ள மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களின் கோரிக்கையின் பேரிலும் உதவி பொறியாளர் (பொ.ப.து.), படப்பை அவர்களின் 12.08.2008 கடிதத்தில் மூங்கில்ஏரி புல எண். 85/1 ஆனது பொதுபணித்துறை பராமரிப்பு இல்லை எனவும் புனித தோமையார் மலை ஊராட்சி ஒன்றியத்தின் பொறுப்பிலும் பராமரிப்பிலும் உள்ளது என விவரம் தெரிவிக்கப்பட்டது. எனவே புனித தோமையார் மலை பஞ்சாயத்து யூனியன் தடையின்மை சான்று பெற்று தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு நில உரிமை மாற்றம் செய்ய நகராட்சிக்கு ஆட்சேபனை இல்லை என்ற விவரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்

**அலுவலக குறிப்பு**

அனுமதியளிக்கலாம்.

**தீர்மானம் எண்: 262** **நாள்: 06.04.2018**

பதிவு செய்யப்பட்டது.

ஓம் ......................

திருமதி. இரா. சந்திரா M.Com.,
MCA., MBA.தனி அலுவலர்,
பம்மல் நகராட்சி

/உண்மை நகல்/

**ஆணையர்**

பம்மல் நகராட்சி

# பம்மல் நகராட்சி

## கூட்ட நடவடிக்கைகளின் எடுகுறிப்பு

**2018** ஆண்டு ஏப்ரல் **10**ம் நாள் செவ்வாய் கிழமை மாலை **3.00** மணிக்கு, பம்மல் நகராட்சியின் மன்றக் கூட்டம் நகராட்சி தனி அலுவலர் மற்றும் ஆணையர் திருமதி. இரா. சந்திரா M.Com., MCA., MBA., அவர்கள் தலைமையில் மன்றக்கூடத்தில் நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைளின் எடுகுறிப்பு.

**<u>பொருள் எண். 1</u>**

சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அவர்களின் கடித எண். Reg.Layout/14378/2017 நாள். **09.04.2018** மூலம் PPD/LO Regularization 2017 No. 168/2018 மூலம் வரன்முறைபடுத்தப்படும் அரசாணை எண். G.O. Ms. No. 78, H&UD dept, dated: 04.05.2017 மற்றும் G.O. Ms. No. 172, H&UD dept, dated 13.10.2017படி பம்மல் நகராட்சி எல்லைக்குட்பட்ட பம்மல் கிராமம் பிரசாந்தி நகர் சர்வே எண். **176**/1B, 176/1V, D,E,F,G,H,I,J,K, L,M,N,O,P,P, 176/4A1, 4A2, 176/4B, 176/5A2, 176/5A1A, 5A1B, 5B, 5A1C & 5A1D ல் உள்ள மனைகளுக்கு மனைப்பிரிவு அனுமதி வழங்கி உத்திரவிடப்பட்டுள்ளதையும் மேலும் மேற்படி அரசாணையின்படி உரிய மனைப்பிரிவில் உள்ள சாலைகளை தானாகவே எடுத்துக்கொள்ளவும் (Suo-Motu) மன்றத்தின் பார்வைக்கும் (ம) முடிவிற்கும்.

**<u>அலுவலக குறிப்பு</u>**

மன்றம் அனுமதியளிக்கலாம்.

**தீர்மானம் எண்: 263** **நாள்: 10.04.2018**

பதிவு செய்யப்பட்டது.

ஒம் ......................
திருமதி. இரா. சந்திரா M.Com.,
MCA., MBA.தனி அலுவலர்,
பம்மல் நகராட்சி

/உண்மை நகல்/
**ஆணையர்**
பம்மல் நகராட்சி

# பம்மல் நகராட்சி

## கூட்ட நடவடிக்கைகளின் எடுகுறிப்பு

2018 ஆண்டு ஏப்ரல் 30ம் நாள் திங்கள் கிழமை மாலை 3.00 மணிக்கு, பம்மல் நகராட்சியின் மன்றக் கூட்டம் நகராட்சி தனி அலுவலர் மற்றும் ஆணையர் திருமதி. இரா. சந்திரா M.Com., MCA., MBA., அவர்கள் தலைமையில் மன்றக்கூடத்தில் நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைளின் எடுகுறிப்பு.

**<u>பொருள் எண்: 01</u>**

பம்மல் நகராட்சி 2011ம் வருடம் முதல தேர்வு நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு 2011 ஆம் கணக்கெடுப்பின்படி 75870 மக்கள் தொகை கொண்ட 21 வார்டுகளை உள்ளடக்கிய 13.80 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் செயல்பட்டு வரும் தேர்வு நிலை நகராட்சியாகும்.

இந்நகராட்சியில் சுமார் 111.872 கிலோ மீட்டர் நீளத்திற்கு 877 சாலைகள் அமைந்துள்ளன. இப்பகுதியில் 21261 வரி விதிப்புகளில், 19415 குடியிருப்புகளாகவும், 1215 வணிக பயன்பாடு கட்டடங்களாகவும், 631 எண்ணிக்கை சிறு தோல் தொழிற்சாலைகள் அமைந்துள்ளது. இந்நகராட்சி பகுதியில் 21261 நச்சுத் தடை தொட்டிகளில் 19415 குடியிருப்பு நச்சுத் தடை தொட்டிகளாகவும், 1215 வணிக பயன்பாட்டு கட்டடங்களில் உள்ள நச்சுத் தடை தொட்டிகளாகவும், 631 எண்ணிக்கை தொழிற்சாலை கட்டடங்களில் உள்ள நச்சுத் தடை தொட்டிகளை அந்த கட்டட உரிமையாளர்கள் மூலம் பயன்பாட்டில் பராமரிக்கப்பட்டு வரப்படுகின்றன.

பம்மல் மற்றும் அனகாபுத்தூர் நகராட்சிகள் சென்னையை ஒட்டி அமைந்துள்ளதால் அதிகளவில் குடியிருப்புகள் உருவாகி உள்ளது. இக்குடியிருப்புகளில் இருந்து வெளியேற்றப்படும் கழிவு நீர் அடையாறு ஆற்றில் கலந்து ஆற்று நீர் மாசுபடுவதுடன் நிலத்தடி நீரும் மாசுபடும் நிலை உள்ளது. எனவே, பொதுமக்கள் நலன் கருதி பம்மல் நகராட்சிக்கு பாதாள சாக்கடை திட்டத்தினை செயல்படுத்திட விரிவான திட்ட அறிக்கை (Detailed Project Report) தயார் செய்யும் பணியினை Tamil Nadu Water Investment Company Limited (TWIC) மூலம் மேற்கொள்ளஅனுமதிக்கு

**அலுவலக குறிப்பு**

அனுமதியளிக்கலாம்.

**தீர்மானம் எண்: 264** **நாள்: 30.04.2018**

மேற்படி திட்டத்திற்கான DPR Charge மற்ற இதர செலவினங்கள் அவ்வப்போது எழும் அனைத்து செலவினங்களையும் மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

ஒம் ......................

திருமதி. இரா. சந்திரா M.Com.,
MCA., MBA.தனி அலுவலர்,
பம்மல் நகராட்சி

/உண்மை நகல்/
**ஆணையர்**
பம்மல் நகராட்சி

# பம்மல் நகராட்சி

## கூட்ட நடவடிக்கைகளின் எடுகுறிப்பு

2018 ஆண்டு ஏப்ரல் 30ம் நாள் திங்கள் கிழமை மாலை 3.00 மணிக்கு, பம்மல் நகராட்சியின் மன்றக் கூட்டம் நகராட்சி தனி அலுவலர் மற்றும் ஆணையர் திருமதி. இரா. சந்திரா M.Com., MCA., MBA., அவர்கள் தலைமையில் மன்றக்கூடத்தில் நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைளின் எடுகுறிப்பு.

<u>**பொருள் எண்: 02**</u>

பம்மல் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வடகிழக்கு பருவமழை மற்றும் ஒக்கி புயல் – 2017ல் இடைவிடாத பொழிந்த மழையினால், இந்நகராட்சி சாலைகள் பழுது ஏற்பட்டுள்ளதை சீர் செய்ய நிதி ஒதுக்கீடு கோரி கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டதில், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், செங்கல்பட்டு மண்டலம் அவர்களின் மின்அஞ்சல் மூலம் 04.04.2018ல் ரூ. 18.75 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளதாகவும், அதற்கான பணியின் எண்ணிக்கை, நீளம் மற்றும் தற்போதைய நிலை ஆகிய விவரங்களுடன் உரிய படிவம் பூர்த்தி செய்து அனுப்பி வைக்க கோரப்பட்டுள்ளது.

மேற்படி பருவமழை காரணமாக கீழ்கண்ட முக்கிய சாலைகள் பொதுமக்கள் அதிகம் உபயோகப்படுத்துவதால், பொதுமக்கள் நலன் கருதி நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு பணி முடிக்கப்பட்டது.

| வ. எண். | பணியின் பெயர் | நீளம் (மீ) | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | பம்மல் நல்லதம்பி சாலை (பொழிச்சலுார் பிரதான சாலை முதல் ஏழுமலை தெரு வரை) தார் சாலை அமைத்தல் | 326.00 | 9.80 |
| 2. | சங்கர் நகர் 19வது தெருவில் தார் சாலை அமைத்தல் | 365.00 | 9.85 |
| | **மொத்தம்** | **691.00** | **19.65** |

மேற்படி பணிகள் ஏற்கனவே வடகிழக்கு பருவமழையினால் வெகுவாக பாதிக்கப்பட்டு பொதுமக்கள் நலன் கருதி மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டன. மேற்படி பணிகக்கு பொது நிதியிலிருந்து செலவிடப்பட்ட பணிகளுக்கான தொகையினை தற்போது, தற்காலிக சாலை பராமரிப்பிற்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ. 18.75 இலட்சத்தினை ஈடு செய்துக்கொள்ள அனுமதிக்கு

**அலுவலக குறிப்பு**

1. அனுமதியளிக்கலாம்.
2. மேற்படி சாலைகள் வடகிழக்கு பருவமழையினால் மிகவும் பழுதடைந்துள்ளதால், பொதுமக்கள் நலன் கருதி பொது நிதியில் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு பணி முடிக்கப்பட்டுள்ளதால், வடகிழக்கு பருவமழை மற்றும் ஒக்கி புயல் – 2017ஆம் ஆண்டிற்கான தற்காலிக சாலை பராமரிப்பிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ. 18.75 இலட்சத்தினை மேற்படி பணி செய்தமைக்கு ஈடு செய்துக்கொள்ளலாம்.

**தீர்மானம் எண்: 265** **நாள்: 30.04.2018**

மாவட்ட ஆட்சியர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டு மேற்கொள்ளப்பட்ட பணிகளுக்கு ஈடாக பெறப்பட்டுள்ள தொகையினை ஏற்கனவே நடைபெற்ற பணிக்கு ஈடு செய்து கொள்ளவும் பணி முடிவறிக்கை அனுப்பவும் அனுமதி வழங்கலாம்.

ஒம் ......................

திருமதி. இரா. சந்திரா M.Com., MCA., MBA.தனி அலுவலர்,
பம்மல் நகராட்சி

/உண்மை நகல்/

**ஆணையர்**

பம்மல் நகராட்சி

# பம்மல் நகராட்சி

## கூட்ட நடவடிக்கைகளின் எடுகுறிப்பு

2018 ஆண்டு ஏப்ரல் 30ம் நாள் திங்கள் கிழமை மாலை 3.00 மணிக்கு, பம்மல் நகராட்சியின் மன்றக் கூட்டம் நகராட்சி தனி அலுவலர் மற்றும் ஆணையர் திருமதி. இரா. சந்திரா M.Com., MCA., MBA., அவர்கள் தலைமையில் மன்றக்கூடத்தில் நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைளின் எடுகுறிப்பு.

**பொருள் எண்: 03**

இந்நகராட்சியில் பயன்படுத்தப்பட்டு வரும் கீழ்கண்ட வாகனத்திற்கு ஒரு வருடத்திற்கான காப்பீடு சந்தா **27.04.2018** உடன் முடிவடைதாகவும், அதற்கான கீழ்கண்ட தொகையினை The New India Assurance Company Ltd அவர்களுக்கு செலுத்தி சந்தாவினை புதுப்பித்துக் கொள்ள அனுமதிக்கு.

| வ. எண் | வாகனம் எண் | வாகனத்தின் பயன்பாடு | தொகை (ரூ) |
|---|---|---|---|
| 1. | TN-22-AJ-1004 | Swaraj Mazda | **29889** |
| | | **மொத்தம்** | **29889** |

**அலுவலக குறிப்பு**

1. அனுமதியளிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியத்தை முன்னிட்டு தனி அலுவலர் அவர்களின் அனுமதி பெற்று தொகை வழங்கியதை அனுமதியளிக்கலாம்.

**தீர்மானம் எண்: 266** **நாள்: 30.04.2018**

அனுமதிகப்பட்டது.

ஓம் .......................

திருமதி. இரா. சந்திரா M.Com.,
MCA., MBA.தனி அலுவலர்,
பம்மல் நகராட்சி

/உண்மை நகல்/

**ஆணையர்**

பம்மல் நகராட்சி

# பம்மல் நகராட்சி

## கூட்ட நடவடிக்கைகளின் எடுகுறிப்பு

2018 ஆண்டு ஏப்ரல் 30ம் நாள் திங்கள் கிழமை மாலை 3.00 மணிக்கு, பம்மல் நகராட்சியின் மன்றக் கூட்டம் நகராட்சி தனி அலுவலர் மற்றும் ஆணையர் திருமதி. இரா. சந்திரா M.Com., MCA., MBA., அவர்கள் தலைமையில் மன்றக்கூடத்தில் நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைளின் எடுகுறிப்பு.

**<u>பொருள் எண் : 04</u>**

காஞ்சிபுரம் மாவட்டம், பம்மல் நகராட்சியின் 2017–2018 ஆம் ஆண்டிற்காக தயார் செய்யப்பட்டுள்ள நிர்வாக அறிக்கை மன்றத்தின் பார்வைக்கு.

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

**தீர்மானம் எண்: 267** **நாள்: 30.04.2018**

அனுமதிகப்பட்டது.

ஓம் .......................
திருமதி. இரா. சந்திரா M.Com.,
MCA., MBA.தனி அலுவலர்,
பம்மல் நகராட்சி

/உண்மை நகல்/
**ஆணையர்**
பம்மல் நகராட்சி

# பம்மல் நகராட்சி

## கூட்ட நடவடிக்கைகளின் எடுகுறிப்பு

2018 ஆண்டு ஏப்ரல் 30ம் நாள் திங்கள் கிழமை மாலை 3.00 மணிக்கு, பம்மல் நகராட்சியின் மன்றக் கூட்டம் நகராட்சி தனி அலுவலர் மற்றும் ஆணையர் திருமதி. இரா. சந்திரா M.Com., MCA., MBA., அவர்கள் தலைமையில் மன்றக்கூடத்தில் நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைளின் எடுகுறிப்பு.

**<u>பொருள் எண். 05</u>**

காஞ்சிபுரம் மாவட்டம், பம்மல் நகராட்சியில் மொத்தமுள்ள 21 வார்டு பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்ள போதுமான துப்புரவு பணியாளர் பணியிடம் தோற்றுவிக்கப்படாத நிலையில் அரசாணை எண். 101, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.30.04.1997ன்படி குறியீட்டின்படி தேவைப்படும் மொத்த துப்புரவு பணியாளர்கள் 349 எண்ணம். இதில் ஏற்கனவே அனுமதிக்கப்பட்டுள்ள 97 பணியிடங்களில் தற்போது 89 நபர்கள் மட்டும் பணியாற்றி வருகின்றனர்.

பம்மல் நகராட்சியில் மொத்தமுள்ள 21 வார்டு பகுதியில், வார்டு எண். 7 முதல் 11 முடிய 5 வார்டுகள் நகராட்சி பணியாளர்களை கொண்டும், வார்டு எண். 1 முதல் 6 வரை மற்றும் வார்டு எண். 12 முதல் 21 முடிய மொத்தம் 16 வார்டுகள் தனியார் மூலம் 2015 முதல் எடை அடிப்படையில் குப்பை அகற்றும் பணிகள் நடைபெற்று வருகிறது. தற்போது குப்பைகளை அந்தந்த பகுதிலேயே கையாளுவதற்கான பசுமை உரக்குடில்கள் அமைக்கப்படுவதால் பணியாளர்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தினக்கூலி பட்டியல் அடிப்படையில் நியமனம் செய்து கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது. மேலும், தற்போது பணிபுரிந்து வரும் ஒப்பந்ததாரர் 31.05.2018 முதல் பணியினை நிறுத்திக்கொள்ளுமாறு உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. தற்போது 7 இடங்களில் ஒருங்கிணைந்த பசுமை உரக்குடில் அமைக்கும் பணி நடைபெற்று வருவதை தொடர்ந்து, அதற்கு தேவையான பேட்டரியினால் இயங்கும் வாகனம் 15 எண்ணம் மற்றும் இலகுரக வாகனம் 13 எண்ணம் முறையே கொள்முதல் செய்யப்பட உள்ளது. மேலும், குறியீட்டின்படி 349 பணியாளர்கள் தேவையாக உள்ள நிலையில், பசுமை உரக்குடில்கள் அமைக்கப்படுவதால் 215 பணியாளர்களே போதுமானது என்றும், இதில் ஏற்கனவே உள்ள 89 நிரந்தரப் பணியாளர்களைத் தவிர்த்து 126 பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் தினக்கூலி அடிப்படையில் ஆண்டொன்றுக்கு ரூ.180.53 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்து கொள்ள நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் செங்கற்பட்டு அவர்களின் வழியாக நகராட்சி நிர்வாக ஆணையர், சேப்பாக்கம், சென்னை – 600005 அவர்களுக்கு பிரேரணை அனுப்பி நடவடிக்கை மேற்கொள்ள அனுமதி கோரப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும்.

**<u>அலுவலக் குறிப்பு :</u>**

1. மன்றம் அனுமதியளிக்கலாம்,
2. நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், செங்கற்பட்டு அவர்களின் வழியாக நகராட்சி நிர்வாக ஆணையர், சேப்பாக்கம், சென்னை – 600005 அவர்களுக்கு பிரேரணை அனுப்பி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதை அனுமதியளிக்கலாம்.

**தீர்மானம் எண்: 268** **நாள்: 30.04.2018**

பிரேரனை அனுப்பவும் ஒப்புதல் பெறும் சமயம் அதற்கான நடவடிக்கைகள் நகராட்சியில் பொது சுகாதாரம் கருதி நகராட்சி நிர்வாக ஆணையரின் ஒப்புதலுடன் நிறைவேற்றவும் ஒப்புதல் அளிக்கலாம்.

ஓம் ........................
திருமதி. இரா. சந்திரா M.Com., MCA., MBA.தனி அலுவலர்,
பம்மல் நகராட்சி

/உண்மை நகல்/
**ஆணையர்**
பம்மல் நகராட்சி

# பம்மல் நகராட்சி

## கூட்ட நடவடிக்கைகளின் எடுகுறிப்பு

**2018** ஆண்டு ஏப்ரல் **30**ம் நாள் திங்கள் கிழமை மாலை **3.00** மணிக்கு, பம்மல் நகராட்சியின் மன்றக் கூட்டம் நகராட்சி தனி அலுவலர் மற்றும் ஆணையர் திருமதி. இரா. சந்திரா M.Com., MCA., MBA., அவர்கள் தலைமையில் மன்றக்கூடத்தில் நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைளின் எடுகுறிப்பு.

**பொருள் எண்.06**

பம்மல் நகராட்சி 2018-19ம் பயன்பாட்டிற்கு கணினி சார்ந்த பொருட்கள் சப்ளை செய்யும் பணிக்கு தோராய செலவினம் ரூ.**9.00** இலசட்தத்திற்கு மன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு**

மன்றம் நிர்வாக அனுமதியளிக்கலாம்.

**தீர்மானம் எண்: 269** **நாள்: 30.04.2018**

நிர்வாக அனுமதி மற்றும் ஒப்புதல் அளிக்கலாம்.

ஓம் ........................
திருமதி. இரா. சந்திரா M.Com.,
MCA., MBA.தனி அலுவலர்,
பம்மல் நகராட்சி

/உண்மை நகல்/
**ஆணையர்**
பம்மல் நகராட்சி

# பம்மல் நகராட்சி

## கூட்ட நடவடிக்கைகளின் எடுகுறிப்பு

**2018** ஆண்டு ஏப்ரல் **30**ம் நாள் திங்கள் கிழமை மாலை **3.00** மணிக்கு, பம்மல் நகராட்சியின் மன்றக் கூட்டம் நகராட்சி தனி அலுவலர் மற்றும் ஆணையர் திருமதி. இரா. சந்திரா M.Com., MCA., MBA., அவர்கள் தலைமையில் மன்றக்கூடத்தில் நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைளின் எடுகுறிப்பு.

**<u>பொருள் எண். 07</u>**

பம்மல் நகராட்சி 2018-19ம் ஆண்டு அலுவலக பயன்பாட்டிற்கு படிவங்கள் பதிவேடுகள் அச்சடித்து கொடுத்தல், எழுதுபொருட்கள் சப்ளை செய்யும் பணிக்கு தோராய செலவினம் ரூ. **5.00** இலசட்தத்திற்கு மன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு.

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் நிர்வாக அனுமதியளிக்கலாம்.

**தீர்மானம் எண்: 270** **நாள்: 30.04.2018**

அனுமதி வழங்கலாம்.

ஓம் .......................

திருமதி. இரா. சந்திரா M.Com.,
MCA., MBA.தனி அலுவலர்,
பம்மல் நகராட்சி

/உண்மை நகல்/
**ஆணையர்**
பம்மல் நகராட்சி

# பம்மல் நகராட்சி

## கூட்ட நடவடிக்கைகளின் எடுகுறிப்பு

2018 ஆண்டு ஏப்ரல் 30ம் நாள் திங்கள் கிழமை மாலை 3.00 மணிக்கு, பம்மல் நகராட்சியின் மன்றக் கூட்டம் நகராட்சி தனி அலுவலர் மற்றும் ஆணையர் திருமதி. இரா. சந்திரா M.Com., MCA., MBA., அவர்கள் தலைமையில் மன்றக்கூடத்தில் நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைளின் எடுகுறிப்பு.

**பொருள் எண். 08**

பம்மல் நகராட்சி பகுதியில் உள்ள வார்டு எண். 1 முதல் 21வரை உள்ள வார்டுகளில் தினசரி கொசுப்புழு ஒழிப்பு பணிகள் செய்தல் பணி செய்ய ஒப்பந்தப்புள்ளி கோரியத்தில் ஒரு நபருக்கு நாளொன்றுக்கு ரூ. 297/- (ரூபாய் இருநூற்று தொன்னூற்றி ஏழு மட்டும்) வீதம் குறைவாக கொடுத்த திரு.எஸ். பொன்ராஜ் எண்டர்பிரைசஸ் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி, இந்நகர்மன்ற தீர்மானம் எண். 270/2015 நாள். 19.10.2015ன்படி அனுமதி பெறப்பட்டு, மேற்படி பணி செய்திட பணி உத்திரவு வழங்கப்பட்டு, ஒப்பந்த காலம் முடிவடைந்த நிலையில், தனி அலுவலர் அவர்களின் 12.12.2017 நாளிட்ட முன் அனுமதியின்பேரில் பணி செய்ய நீட்டிப்பு வழங்கப்பட்டுள்ள டெங்கு கொசு ஒழிப்பு பணி 11.03.2018வுடன் முடிவடைவதால், 12.03.2018 முதல் 31.03.2018 வரை 20 நாட்களுக்கு வழங்கப்பட்டுள்ள முனு அனுமதியின்படியும், தற்போது ஈக்காடு அக்ரோ மூலம் டன் அடிப்படையில் திடக்கிழிவு அகற்றும் பணியினை மேற்கொண்டு வரும் ஒப்பந்ததாரருக்கு 31.05.2018வுடன் பணியை முடித்துக்கொள்ளுமாறு அறிவிப்பு வழங்கப்பட்டு, புதியதாக 126 பணியாளர்களை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் தினக்கூலி அடிப்படையில் பணி மேற்கொள்ள புதிய ஒப்பந்தப்புள்ளி கோர நகராட்சி நிர்வாக ஆணையரின் அனுமதியினை எதிர்நோக்குவதால், அதனுடன் சேர்த்து இப்பணிக்கும் ஒப்பந்தப்புள்ளி கோரவும், 70 DBC பணியாளர்களுடன் அதே ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதத்தில் டெங்கு கொசு ஒழிப்பு பணியில் ஈடுப்பட்டு வரும் பணியாளர்களை ஒரு வருடம் முழுவதும் (365 நாட்கள்) பயன்படுத்தி டெங்கற்ற நகரமாக மாற்ற நகராட்சி நிர்வாக ஆணையர் அறிவுறுத்தியுள்ளபடி துப்புரவு பணிக்கு நபர்களை தனியார் ஒப்பந்தப்புள்ளி கோரும் நாள் வரை டெங்கு தடுப்பு பணியாளர்களை மக்கும், மக்காத குப்பையினை பிரித்தெடுக்கும் பணிகளுக்கும் பயன்படுத்த வேண்டிய நிலை உள்ளதால் மீண்டும் இப்பணியாளர்களை 01.04.2018 முதல் 31.05.2018 வரை 61 நாட்களுக்கு காலநீட்டிப்பு செய்தல், மேலும் ஒப்பந்ததாரர் Bio-Metric முறையில் வருகை பதிவேட்டினை வரும் 01.05.2018 முதல் வருகையாளரின் கணக்கினை அளித்திட்ட பணியாளர்களுக்கு மட்டுமே ஊதியம் கணக்கிடப்பட்டு வழங்க அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு**

1. அனுமதியளிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியத்தை முன்னிட்டு தனிஅலுவலர் அவர்களின் அனுமதி பெற்று 12.03.2018 முதல் 31.03.2018 வரை 20 நாட்களுக்கு முன் அனுமதி வழங்கப்பட்டுள்ள காலத்திற்கும், மேலும் 01.04.2018 முதல் 31.05.2018 வரை 61 நாட்களுக்கு பணி நீட்டிப்பு செய்ய அனுமதியளிக்கலாம்.

**தீர்மானம் எண்: 271** **நாள்: 30.04.2018**

மாவட்ட ஆட்சியர் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் அறிவுறுத்தலின்படி தொடர்ந்து டெங்கு தடுப்பு நடவடிக்கைகள் பேனர், போஸ்டர், விழப்பு பேரணி மற்றும் வீடு வீடாக சென்று அறிவுறுத்தல் ஆகிய நிகழ்வுகளை மேற்கொள்ள மனறம் அனுமதி வழங்கலாம். தொடர்ந்து பணி தடையின்றி நடைபெறவும் அனுமதி வழங்கலாம்.

ஒம் ......................

திருமதி. இரா. சந்திரா M.Com., MCA., MBA.தனி அலுவலர்,
பம்மல் நகராட்சி

/உண்மை நகல்/

**ஆணையர்**
பம்மல் நகராட்சி

# பம்மல் நகராட்சி

## கூட்ட நடவடிக்கைகளின் எடுகுறிப்பு

2018 ஆண்டு ஏப்ரல் 30ம் நாள் திங்கள் கிழமை மாலை 3.00 மணிக்கு, பம்மல் நகராட்சியின் மன்றக் கூட்டம் நகராட்சி தனி அலுவலர் மற்றும் ஆணையர் திருமதி. இரா. சந்திரா M.Com., MCA., MBA., அவர்கள் தலைமையில் மன்றக்கூடத்தில் நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைளின் எடுகுறிப்பு.

**<u>பொருள் எண். 09</u>**

பொது சுகாதாரப்பரிவு – இந்நகராட்சிப் பகுதியில் உள்ள வார்டு எண். 1 முதல் 21 வரையிலான பகுதிகளில் உருவாகும் திடக்கழிவினை தரம்பிரித்து மக்கும் கழிவு மக்காத கழிவு என பிரித்து மக்கும் கழிவுகளை நூன்உரம் தயாரிக்கும் பணிக்காக தற்போது இந்கராட்சிப் பகுதியில் 7 இடங்களில் பசுமை உரக்குடில் மையம் கட்டப்பட்டு வருகிறது. இதில் விஸ்வேஷபுரம் என்னும் இடத்தில் கட்டப்பட்டுள்ள பசுமை உரக்குடில் மையம் தற்போது பயன்பாட்டில் உள்ளது. இமையத்திற்கு தற்போது மக்கும் கழிவுகள் வரதொடங்கியுள்ளபடியால் இம்மக்கும் கழிவுகளை மக்கச் செய்வதற்கு தேவையான EM Solution தற்போது தேவைப்படுகின்றனது. இந்த EM Solution சொந்த உற்பத்தி மூலம் 100 லிட்டர் தண்ணீர், 3 கிலோ வெல்லம் ½ Litre புளித்த தயிர் என்ற விகிதத்தில் கலந்து 7 நாட்கள் ஊறல் போட்டு பின்பு எடுத்து பயன்படுத்தப்பட்டு வருகிறது. இந்த EM Solution தற்போது 200 லிட்டர் இருப்பில் உள்ளது.

இருப்பினும், இவ்விருப்பு என்பது தற்போதுள்ள நிலைக்கு போதுமானதாக இருப்பதாக தெரியவில்லை. எனவே சப்ளை தாரரிடம், 200 லிட்டர் EM Solution வாங்கவும் இந்த EM Solution உடன் சேர்த்து புளிக்க வைப்பதற்கு 1 லிட்டருக்கு 3 கிலோ வெல்லம் வீதம் வாங்குவதற்கும் இப்பொருளை வாங்கி 1 லிட்டர் மருந்து EM Solutionனுடன் 3 கிலோ வெல்லம் சேர்த்து 20 லிட்டர் தண்ணீரில் 7 நாட்கள் காற்று புகாவண்ணம் மூடிவைத்து பின்பு 7 நாட்கள் முடிந்த பிறகு 1 லிட்டர் ஊரவைத்த EM Solutionனுடன் 49 நாட்கள் தண்ணீரில் கலந்து திடக்கழிவின் மீது தெளித்து பயன்படுத்தலாம்.

எனவே, மேற்படி பணிக்கு 200 லிட்டர் EM Solution மற்றும் 600 கிலோ வெல்லம் வாங்க தோராய செலவினம் ரூ. 2.50 இலட்சத்திற்கு அனுமதிக்கு

**அலுவலக குறிப்பு**

அனுமதியளிக்கலாம்.

**தீர்மானம் எண்: 272** **நாள்: 30.04.2018**

பசுமை உரக்குடில் அவசியத்தை கருதி அதற்கான திட்டத்தை (EM Solution) தயாரிக்க தேவைப்படும் உபகரணம் மற்றும் பொருட்கள் வாங்க அனுமதியிக்கலாம்.

ஒம் ......................

திருமதி. இரா. சந்திரா M.Com.,
MCA., MBA.தனி அலுவலர்,
பம்மல் நகராட்சி

/உண்மை நகல்/

**ஆணையர்**
பம்மல் நகராட்சி

# பம்மல் நகராட்சி

## கூட்ட நடவடிக்கைகளின் எடுகுறிப்பு

2018 ஆண்டு ஏப்ரல் 30ம் நாள் திங்கள் கிழமை மாலை 3.00 மணிக்கு, பம்மல் நகராட்சியின் மன்றக் கூட்டம் நகராட்சி தனி அலுவலர் மற்றும் ஆணையர் திருமதி. இரா. சந்திரா M.Com., MCA., MBA., அவர்கள் தலைமையில் மன்றக்கூடத்தில் நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைளின் எடுகுறிப்பு.

**<u>பொருள் எண். 10</u>**

பம்மல் நகராட்சியில் கீழ்கண்ட விவரப்படியான பணிகளை மேற்கொள்ள 26.04.2018 தேதியில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

| வ. எண் | பணிகளின் விவரம் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப் புள்ளி (%) | குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்தவர் |
|---|---|---|---|---|---|
| சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாடு திட்டம் 2016–17 | | | | | |
| 1. | வார்டு எண். 3, கஸ்தூரிபாய் தெரு ஆழ்துளை கிணறுடன் 500LPH RO Plant அமைத்தல் | 6,40,000/- | Ms. High Tech Water Technologies PVT Ltd | 0.85% (அதிகம்) | Ms. Ozone TEchnologies மதிப்பீட்டு தொகை |
| | | | Ms. Ozone TEchnologies | மதிப்பீட்டு தொகை | |
| 2. | வார்டு எண். 7, பஜனைக்கோயில் தெருவில் ஆழ்துளை கிணறுடன் 500LPH RO Plant அமைத்தல் | 6,40,000/- | Ms. High Tech Water Technologies PVT Ltd | 0.85% (அதிகம்) | Ms. Ozone TEchnologies மதிப்பீட்டு தொகை |
| | | | Ms. Ozone TEchnologies | மதிப்பீட்டு தொகை | |
| 3. | வார்டு எண். 9, லட்சுமி நாராயணன் நகரில் ஆழ்துளை கிணறுடன் 500LPH RO Plant அமைத்தல் | 6,40,000/- | Ms. High Tech Water Technologies PVT Ltd | 0.85% (அதிகம்) | Ms. Ozone TEchnologies மதிப்பீட்டு தொகை |
| | | | Ms. Ozone TEchnologies | மதிப்பீட்டு தொகை | |
| 4. | வார்டு எண். 13, திருவள்ளுவர் தெரு (மேற்கு) தெருவில் ஆழ்துளை கிணறுடன் 500LPH RO Plant அமைத்தல் | 6,40,000/- | Ms. High Tech Water Technologies PVT Ltd | 0.85% (அதிகம்) | Ms. Ozone TEchnologies மதிப்பீட்டு தொகை |
| | | | Ms. Ozone TEchnologies | மதிப்பீட்டு தொகை | |
| 5. | வார்டு எண். 15, ராஜிவ்காந்தி நகர் 1வது தெருவில் ஆழ்துளை கிணறுடன் 500LPH RO Plant அமைத்தல் | 6,40,000/- | Ms. High Tech Water Technologies PVT Ltd | 0.85% (அதிகம்) | Ms. Ozone TEchnologies மதிப்பீட்டு தொகை |
| | | | Ms. Ozone TEchnologies | மதிப்பீட்டு தொகை | |
| 6. | வார்டு எண். 19, மீனாம்பாள் தெருவில் ஆழ்துளை கிணறுடன் 500LPH RO Plant அமைத்தல் | 6,40,000/- | Ms. High Tech Water Technologies PVT Ltd | 0.85% (அதிகம்) | Ms. Ozone TEchnologies மதிப்பீட்டு தொகை |
| | | | Ms. Ozone TEchnologies | மதிப்பீட்டு தொகை | |
| 7. | வார்டு எண். 20, நவமணி தெருவில் ஆழ்துளை கிணறுடன் 500LPH RO Plant அமைத்தல் | 6,40,000/- | Ms. High Tech Water Technologies PVT Ltd | 0.85% (அதிகம்) | Ms. Ozone TEchnologies மதிப்பீட்டு தொகை |
| | | | Ms. Ozone TEchnologies | மதிப்பீட்டு தொகை | |

| சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாடு திட்டம் 2017–18 | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | வார்டு எண். 18, கல்யாணிபுரம் பெரியபாளையத்தம்மன் கோயில் தெருவில் ஆழ்துளை கிணறுடன் 500LPH RO Plant அமைத்தல் | 6,38,000/- | Ms. High Tech Water Technologies PVT Ltd | 0.85% (அதிகம்) | Ms. Ozone TEchnologies மதிப்பீட்டு தொகை |
| | | | Ms. Ozone TEchnologies | மதிப்பீட்டு தொகை | |
| 2. | வார்டு எண். 21, ஆதம் நகர் பகுதியில் ஆழ்துளை கிணறுடன் 500LPH RO Plant அமைத்தல் | 6,38,000/- | Ms. High Tech Water Technologies PVT Ltd | 0.85% (அதிகம்) | Ms. Ozone TEchnologies மதிப்பீட்டு தொகை |
| | | | Ms. Ozone TEchnologies | மதிப்பீட்டு தொகை | |

**அலுவலக குறிப்பு**

குறைந்த ஒப்பந்தப்புள்ளி அனுமதியளிக்கலாம்.

**தீர்மானம் எண்: 273** **நாள்: 30.04.2018**

அனுமதியளிக்கலாம்.

ஒம் ........................
திருமதி. இரா. சந்திரா M.Com., MCA., MBA.தனி அலுவலர்,
பம்மல் நகராட்சி

/உண்மை நகல்/

**ஆணையர்**
பம்மல் நகராட்சி